1987 மார்ச் 2]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவனந்தபுரத்திலிருந்து கன்னியாகுமரி போக்குவரத்து சாலையில் போக்குவரத்து மிகவும் நெருக்கடியாக இருக்கிறது என்பது அமைச்சரவர்களுக்கு நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். ஆகவே அந்தப் பகுதியிலே கடலோரச் சாலையை மாற்றுப் பாதை என்ற முறையிலே அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை தெரியாமல் அல்ல. ஆனால் நிதிப் பிரச்சினை காரணமாக எல்லாவற்றையும் உடனடியாக எடுத்துக் கொள்ள முடியாமல் இருக்கிறது. ஏற்கனவே பல வேலைகளை எடுத்துச் செய்து கொண்டிருந்ததால் அந்தப் பாதையைப் பொறுத்தவரையில், கொஞ்சம் அதிகத் தொகையாகும் என்ற காரணத்தினால், ஒரு பகுதியைச் செய்வதனால் பலன் இருக்காது. முழுவதையும் செய்ய வேண்டுமென்ற நிலை இருப்பதனால் அந்தப் பாதையை நிறுத்தி வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில் யோசித்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து திருவனந்தபுரம் வரை ஒரு மாற்றுப் பாதை என்ற முறையிலே கடலோரச் சாலை அமைப்பது சம்பந்தமாக எல்லா இடங்களிலேயும் உடனடியாக செய்ய முடியாவிட்டாலும் கூட, மிக முக்கியமான போக்குவரத்து நெருக்கடி இருக்கக்கூடிய இடங்களிலாவது பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அது பற்றி தனியாக யோசித்துப் பார்க்கலாம்.

சத்யமேவ வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆயக்குடி—கோடைக்கானல் சாலையில் சர்வே செய்ய நடவடிக்கை.

11—(*வினா எண். 7825)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆயக்குடி - கொடைக்கானல் (வழி) சட்டப்பாறை ரோடு, மேல் மட்டம், செம்பிரான் குளம் ஆகிய பகுதிகளை கொடைக்கானலுடன் இணைப்பதற்கு சர்வே செய்யப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது இதுவரை எடுத்த நடவடிக்கை என்ன?

[1987 மார்ச் 2

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை,

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதிகளிலிருந்து அதாவது மேல் மட்டம், செம்பிரான்குளம் ஆகிய பகுதிகளிலிருந்து ஆயிரக் கணக்கான சிறு சிறு விவசாயிகள் வேலை செய்துவிட்டு, அந்தப் பகுதி வழியாக நடந்தே வந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியை 20 ஆண்டுகளுக்கு முன்பே மத்திய அரசினுடைய குழு வந்து சர்வே செய்திருப்பதாக விவசாயிகள் சொல்கிறார்கள். இப்போது அமைச்சரவர்கள் இல்லையென்று சொல்கிறார்கள். நான் சொன்னது, விவசாயிகள் சொன்னதை வைத்துத்தான். அது மட்டுமல்லாமல் 500-க்கும் மேற்பட்ட குடும்பங்கள், ஆதி வாசிகள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அதை மறு பரி சீலனை செய்து அவர்கள் உற்பத்தி செய்கின்ற கிழங்குகள், பழங்கள் போன்றவற்றை கீழே கொண்டு வருவதற்கும், உணவுப் பொருட்களைக் கொண்டு வருவதற்கும் வழிவகை செய்யக்கூடிய வகையிலே இதை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, பரிசீலித்து, ரூ. 3 கோடியாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய கருத்தை அடிப்படை யாகக் கொண்டு அதனுடைய அவசியத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் நிதிப் பிரச்சினையின் காரணமாக உடனடி யாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. தனியாக ஆய்வு செய்ய லாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, ஆதிவாசிகள் என்று சொல்வது அங்கே வசிக்கும் மலைவாழ் மக்கள்தான். அவர்களுக்கு நாமே எதையும் செலவழிக்க வேண் டிய அவசியமில்லை. மத்திய அரசாங்கம் கொடுக்கத் தயாராக இருக்கிறது. முழுப் பணத்தைக் கூட மத்திய அரசாங்கத்திட மிருந்து வாங்கி ரோட்டை அமைப்பதற்கான ஏற்பாட்டை அமைச்சரவர்கள் விரைவில் செய்வதற்கான முயற்சிகளை எடுத் துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் கொடுக்கிறது என்று சொன்னால் நாம் பட்டியல் போட்டு அனுப்புகிறோம். அந்தப் பட்டியலில் அவர்கள் கொடுக்கின்ற பணத்தில் சீனியாரிட்டி என்று வருகிறது. அதன் பிரகாரம் நாம் வைத்துக் கொண்டிருக் கிறோம். மத்திய அரசாங்கம் பணம் கொடுத்து நாம் வேண்டாம்

1987 மார்ச் 2]

என்று சொல்வதைப்போல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, வெளியிலே தெரிவது சரியாக இருக்காது. இந்தத் துறையைப் பொறுத்தவரையில் மத்திய அரசாங்கம் ஒதுக்குகின்ற முழுப் பணத்தையும் நாம் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். எனவே தாங்கள் கூட முயற்சி எடுத்து அதற்காக தனியாக ஒதுக்கித் தந்தால் அந்த வேலையை எடுத்துக் கொள்வதில் எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. இங்கு இருப்பது நிதி பிரச்சினைதான்.

திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு தொடர்ச்சி மலை வளர்ச்சி திட்டத்தின் கீழ் மலைப் பகுதிகளில் பல சாலைகள் நெடுஞ்சாலைத் துறையினால் சர்வே செய்யப்படுகின்றன. அப்படி சர்வே செய்யப்படும்போது வனத் துறை அதிகாரிகளால் சர்வே செய்வதற்குக் கூட அனுமதி மறுக்கப்படுகிறது. அவ்வாறு வனத் துறை அதிகாரிகள் அனுமதி மறுக்கப்படுவதால் சர்வே தாமதமாக ஆகிறது. ஆகவே, அதைத் தடுத்து சர்வே செய்வதற்கு அனுமதி அளிக்கப்படுமா என அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதற்குச் சம்பந்தம் இல்லாத கேள்வி என்றாலும், மத்திய அரசாங்கம் வனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக இப்படி ஒரு கடுமையான திட்டத்தை அவர்கள் அமுலாக்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே தேவை இல்லாத இடங்களில் மரங்களை வெட்டக் கூடாது என்பதை அவர்கள் கடுமையாக பார்த்துக் கொண்டு இருப்பதால் இந்த நிலை ஏற்படுகிறது. இருந்தாலும் எங்கே அவசியம் ஏற்படுகிறதோ அந்த இடத்தில் நாம் மத்திய அரசாங்கத்தின் அனுமதியோடு அந்தப் பணியை துவக்குவதில் எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது. சில நேரங்களில் அனுமதி வருவதற்குக் காலதாமதம் ஏற்படுகின்றபோது இப்படிப்பட்ட சங்கடங்கள் ஏற்படுகின்றன. எனவே மத்திய அரசாங்கத்திடம் நாம் கேட்டு அந்த அனுமதியைப் பெற்று செய்கின்றபோது அந்த நிலைமை வராது.

கொடைக்கானலில் பழனி—பள்ளங்கி மலைச்சாலை திட்டம்.

12—(*வினா எண். 8640) திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கொடைக்கானல் தாலுக்காவில் பழனி-பள்ளங்கி மலைச்சாலை திட்டம் எந்த நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இச்சாலை எந்தத் திட்டத்தின் கீழும் எடுத்துக் கொள்ளப்படவில்லை.